

திருப்பூர் மாநகராட்சி, பாண்டியன் நகர் பகுதியில் வாணவெடி வகை பட்டாசு வெடித்து விபத்து ஏற்பட்டு திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நபர்களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.முருகேசன் ஆகியோர் உள்ளனர்.

### முதல்வரால் திறக்கப்பட்ட 2 வாரத்தில்

# தஞ்சை 'நியோ டைடல் பார்க்' - நிறுவனங்களால் நிரம்பியது!

தஞ்சை, அக்.15-

தஞ்சை மாவட்டம் என்றாலே அது விவசாயம் மட்டும் தான். விவசாய குடும்பத்தில் பிறந்த குழந்தைகள் தங்களது மேல் படிப்பை முடித்து விட்டு சென்னை, மும்பை, கர்நாடகா, புனே, கேரளா உள்ளிட்ட வெளி மாநிலங்களில் தங்களது குடும்பங்களை பிரிந்து பணி செய்து வருகிறார்கள்.

இந்நிலையில், படித்த இளைஞர்கள், பெண்கள் ஐடி வேலைகளை பெற உதவும் வகையிலும் சமூகப் பொருளாதார மேம்பாட்டை அடைவதற்காகவும் தஞ்சாவூர் மாவட்டத்தில் மினி டைடல் பார்க் அமைக்கப்படும் என்று கடந்தாண்டு தமிழக அரசு அறிவிப்பு வெளியிட்டது.

அதன்படி டெல்டா மாவட்டத்தின் மைய பகுதியான தஞ்சையில் சுமார் 3.40 ஏக்கர் பரப்பளவில் 55,000 சதுர அடியில் ரூ.30.50 கோடி மதிப்பில் 4 அடுக்கு மாடி கட்டிடமாக நியோ டைடல் பூங்காவை தமிழக அரசு அமைத்து தந்துள்ளது. இதன் மூலம் படித்த இளைஞர்கள் சுமார் 500 பேருக்கு மென்பொருள் வல்லுநர்களாகவும், சுமார் 600 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்க வழி வகை செய்யப்பட்டது.

இந்த டைடல் பூங்காவை கடந்த செப்.23ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து நிறுவன உரிமையாளர்களுக்கு பணி ஆணை வழங்கினார். இந்த மினி டைடல் பூங்காவில் மொத்தமாக 14 நிறுவனங்கள் செயல்படும் அளவிற்கு இடவசதி உள்ளது.

ஒவ்வொரு நிறுவனத்திற்கு 3500 முதல் 3700 சதுர அடி இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது இந்த டைடல் பூங்காவில் அனைத்து இடங்களும் முன்னணி நிறுவனங்கள் மூலம் நிரப்பப்பட்டுள்ளதாக அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்து உள்ளார்.

இது குறித்து தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தனது எக்ஸ் தளத்தில், 'தஞ்சாவூரில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினால் திறக்கப்பட்ட டைடல் நியோ பார்க் 15 நாட்களிலேயே ஒட்டுமொத்த பகுதியும் நிறுவனங்க ளால் நிரம்பியது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் ஆழமாக ஊடுருவும் முயற்சியில் அரசு இருப்பதால் பெருமிதம்' என்று பதிவிட்டுள்ளார்.

### மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. - கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. மலரஞ்சலி!

# கழக முன்னோடி எஸ்.முத்தையா மகன் மிதுன் நினைவேந்தல் - படத்திறப்பு!

**கலாநிதி வீராசாமி எம்.பி., இரா.கிரிராஜன் எம்.பி., தி.மு. தனியரசு எம்.சி. பங்கேற்பு!**

சென்னை, அக்.15-

திருவொற்றியூர் பகுதி கழக முன்னாள் அவைத் தலைவர் எஸ். முத்தையா அவர்களின் மூத்த மகன் எம். ஈஸ்வரன் மிதுன் 16 ஆம் நாள் நினைவேந்தல் நிகழ்ச்சி இன்று(15.10.2024) மாலை 6:00 மணிக்கு நடைபெற உள்ளது.

நிகழ்ச்சியில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும், மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர், மாநில மீனவர் அணி துணைத் தலைவர்,கே.பி. சங்கர் ஆகியோர் திருவுருவப் படத்தை திறந்து வைத்து மலர் அஞ்சலி செலுத்துகின்றனர்.

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, மாநிலங்களவை உறுப்பினர் வழக்கறிஞர் இரா. கிரிராஜன், திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர், பெருநகர மாநகராட்சி மண்டலம் ஒன்று குழு தலைவர் தி.மு.தனியரசு, திருவொற்றியூர் மேற்குப் பகுதி செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன்,மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம், தலைமை செயற்குழு உறுப்பினர் வி.இராம நாதன், மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ். கணேசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா. முருகேசன், டி.ஏ.ராஜ், திருவொற்றியூர் கிழக்கு பகுதி அவைத்தலைவர் ஆர்.சி.ஆசைத் தம்பி, துணை செயலாளர்கள் எம்.வி.குமார், ஆர்.எஸ்.சம்பத்,பிரபாவதி மணி, பொருளாளர் ஆர். குமரேசன், வட்டச் செயலாளர்கள் த.கார்த்திகேயன், எம்.எல்.சரவணன்,டி.சி.வி. மணிகண்டன்,வழக்கறிஞர் தமிழ்ச் செல்வன், குருத்து சி. முனுசாமி, லைலாண்ட் க.வீ. சதீஷ்குமார், கேபிள் டிவி எம்.ராஜா,ஏகா. கார்த்திகேயன், ஆர்.சந்தர், மாவட்டப் பிரதிநிதிகள் முன்னாள் நகரமன்ற உறுப்பினர் பி. எஸ்.சைலஸ், கே.கார்த்திகேயன், ஆர்.ரஜினிபாபு, ஒய்.நந்திவர்மன், வழக்கறிஞர் எஸ். பாஸ்கரன், டி.டி.எம்.பாபு, டில்லி, ஜே.பி.சந்தான கிருஷ்ணன்,ம.ஜெய ராமன், பழனிவேல், எத்திராஜ், அப்துல் சலீம்,ஆதி குருசாமி,மாவட்ட அணி நிர்வாகிகள் கு. தமிழ் மணி, எம்.கோமலவல்லி,மா.வெ.நா.உதயகுமார், லைலாண்ட் குமார், எம்.எம்.செந்தில், டி.ஜி.ஆர். மணிவண்ணன், டி.பி.பாலசுந்தரம்,நி. நித்யா தாசன், பா.பாலஉமாபதி, என்.சுந்தரமூர்த்தி, அரங்கநாதன், அருளானந்தம்,எம்.எஸ். தினேஷ்வேலன்,

எம்.எல்.வேலன்,முன்னாள் நகரமன்றஉறுப்பினர் மணி, தலைமை கழக பேச்சாளர்கள் எழும்பூர் கோபி, வாசுகருணாநிதி, பண்ணை சந்திரசேகர், முனுசாமி, வெங்கட், கொசப்பூர் ரவிச்சந்திரன், இரா.கணேசன், பாஸ்கர், முத்து, தார்கணேசன், எம்.எஸ்.பாண்டி, பி. கலைமூர்த்தி, பி.கருணாநிதி, எஸ்.என்.ஆர், ராதா தங்கவேலு,ச.விஜயராகவன், மேஸ்திரி மூர்த்தி, எத்திராஜ், கௌசல்யா கண்ணன், திருமதி விஜயா, காங்கிரஸ் பகுதி தலைவர் அர விந்த் ஆறுமுகம்,பி விமல்தாஸ், வாழப்பாடி செந்தில், மாமன்ற உறுப்பினர் ஜெயராமன்,ஏ.பி.நாகராஜ்,திருப்பதி,கார்த்திக் ராஜா,மகேந்திரன், மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

### தேசியவாத காங்கிரஸ் (அஜித்பவார் பிரிவு) தலைவர்

# பாபா சித்திக் படுகொலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, அக்.15-**

**தேசியவாத காங்கிரஸ் (அஜித் பவார் பிரிவு) தலைவர் பாபா சித்திக் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கலைத் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :-

தேசியவாத காங்கிரஸ் (அஜித் பவார் பிரிவு) தலைவர் பாபா சித்திக் அவர்கள் படுகொலை செய்யப்பட்டதை அறிந்து மிகுந்த அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் உள்ளானேன். குடிமைச் சமூகத்தில் இது போன்ற வன்முறைச் செயல்களுக்கு இடமில்லை. இவை கடும் கண்டனத்துக்குரியவை ஆகும்.

பாபா சித்திக் அவர்களின் குடும்பத்தாருக்கும் கட்சியினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், ஈரோடு மண்டலம் தொழிலாளர் முன்னேற்ற சங்க நிர்வாகிகளாக மத்திய சங்க தலைவர் ஜெ.நவநீதகுமார், பொது செயலாளர் பி.எஸ்.பாலகுமார், பொருளாளர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி, துணை பொதுச் செயலாளர் எ.எஸ்.தங்கராஜ் மற்றும் துணை நிர்வாகிகள் தொழிலாளர் முன்னேற்ற சங்க அலுவலகத்தில் பொறுப்பேற்று கொண்டனர்.

# புகழாய் வாழ்கிறார் அண்ணன் 'முரசொலி செல்வம்'



**மா**ற்றம் ஒன்றுதான் மாறாதது என்றார் பொதுவுடைமைச் சிந்தனையாளர் கார்ல் மார்க்ஸ். அதையே கொஞ்சம் மாற்றி மாற்றம் என்பது மானுடத் தத்துவம் என்றார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் "நிலையான புகழ் உனக்கு நிலையில்லா மனம் உனக்கு" என்று போற்றப்பட்ட கவிஞர் கண்ணதாசன்.

பழகியவர்கள் மட்டுமல்ல; பழகாதவர்களையும் மனதால், உடலால் பதற வைக்கிற இறப்பு என்பதும் என்றும் மாறாதது என்று எவரும் சொல்லவில்லை. இறைத் தூதர்கள் என்று அழைக்கப்பட்ட இயேசுநாதரும், நபிகள் பெருமானும், சீரடி சாய்பாபா போன்றவர்களும் ஏன் கடவுளாக வணங்கப்படும் ராமர் கூட சரயு என்ற நதியில் மூழ்கித் தான் இறந்தார் என்றும் நாம் படித்து அறிந்த உண்மையாகும்.

பத்து பேராக உள்ளவர்கள் பதினோரு பேராக உயர வேண்டும் ஒன்பதாகக் குறையக்கூடாது அப்போது தான் நம் இயக்கம் வளரும் நமது கொள்கையும் மக்களைச் சென்றடையும் என்ற அண்ணா அவர்கள் கூட சிலரிடம் கோபப்பட்டது ஒரு சிலரை ஒருமையில் பிரியமாக பேசுவதும் உண்டு. தலைவர் கலைஞர் அவர்களும் சிலரை ஒருமையில் பேசுவதும் தஞ்சைக்கே சொந்தமான வாய்யா! போய்யா! என்று பேசுவதுண்டு என்று படித்திருக்கிறேன்.

ஆனால் தந்தை பெரியார் அண்ணா மற்றும் கலைஞரை வளர்த்து மகிழ்ந்தவர். அந்த பெரியார் அவர்கள் சிறுபிள்ளையாக இருந்தாலும் வாங்க, உட்காருங்கள், கூறுங்கள் என்று தான் கூறுவாராம். ஒருவர் அவரை பார்க்கச் சென்றால் வயதில் குறைவானவராக இருந்தாலும் எழுந்து நின்று வரவேற்பாராம். இப்படி தனக்கு நிகழ்ந்ததை அண்ணன் திரு.ராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ் அவர்கள் கூறிடக் கேட்டறிந்தேன்.

ஏன் இதனைக் குறிப்பிட்டுள்ளேன் என்றால் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மருமகன், நம் முதல்வர் அண்ணன் தளபதி அவர்களின் தங்கை கணவர் அதாவது அத்தான் நம்மால் மறக்க முயற்சித்தாலும் மீண்டும் மீண்டும் வந்து தனது சிரித்த முகத்தைக் காட்டிடும் அண்ணன் முரசொலி செல்வம் தந்தை பெரியார் அவர்களைப் போல் அனைவரையும் அவர் சிறியவராக இருந்தாலும் வாங்க என்று அழைக்கும் பாங்கின் அழகே அழகுதான்.

எனக்கு கழகத்தில் சேர்ந்த பிறகு தான் அவரது பழக்கம் ஏற்பட்டது. எனது எழுத்தாற்றலை அறிந்து முரசொலியில் தொடர்ந்து எழுதுங்கள் என்று ஊக்கப்படுத்தினார். அதோடு மட்டுமல்ல நான் எழுதிய கட்டுரைகளைப் படித்துவிட்டு நன்றாக இருந்தது அதில் ஒரு கருத்தைச் சொல்லி இதையும் சேர்த்து எழுதியிருந்தால் இன்னும் நன்றாக இருக்கும் என அவர் தொலைபேசியில் அழைத்து சில நேரம் கூறுவது என் ரத்த நாளங்களில் ஒருவித துள்ளலை ஏற்படுத்தியதை நான் எப்படி மறப்பேன்?

மிகச் சிறந்த எழுத்தாளர், சிந்தனையாளர், ஞாபக சக்தி நிறைந்தவர், அறிவிற் சிறந்தவர், அன்பில் உயர்ந்தவர், மனிதரில் சிறந்த மனிதநேயர், அரசியலில் திறமைச்சாலிதான் வளர வேண்டும் என்ற குணாளர், அறிஞர் அண்ணா மீது அவருக்கிருந்த பாசம் தலைவர் கலைஞர் மீது கொண்டிருந்த கணக்கிட முடியா மதிப்பு இன்றைய முதல்வர் அண்ணன் தளபதி அவர்களின் மீது கொண்டிருந்த பாசம் அவரது திராவிட மாடல் அரசு ஆண்டாண்டு காலம் தொடர வேண்டும் என்ற அவரது ஆசை என்று அவரிடம் இருந்தவைகள் அளவற்றவை. அந்த மாமனிதர் தான் அண்ணன் முரசொலி செல்வம்.



**வி.பி. கலைராஜன்**
கழக இலக்கிய
அணிச் செயலாளர்

மாணவராக இருந்த போது இந்தி எதிர்ப்பு போரில் கலந்து கொண்டது. அவருடன் நெருங்கி மாணவர்கால தோழனாக இருந்து களம்புகுந்து தமிழ் காத்த இன்றைய அமைச்சர் அண்ணன் துரைமுருகன் போன்ற நண்பர்களின் நட்பு அன்றைய கால நிகழ்வுகளை அவர் சொல்ல நான் கேட்கக் கிடைத்த வாய்ப்பை என்னென்பேன்! ஏதென்பேன்! தி.மு.க வளர்ச்சியில் அவரின் பங்கு அளப்பரியது.

அண்ணன் செல்வம் திராவிட இயக்கத்திற்கு கிடைத்த மற்றொரு ஏ.டி.பன்னீர் செல்வம் ஆவார். தி.மு.க.வில் இருந்தவர்கள் நாவலர், பேராசிரியர் உட்பட நடத்திய பத்திரிகைகள் 200க்கும் மேல், அறிஞர் அண்ணா கழகத்தின் நாளேடாக கொண்டு வந்த 'நம்நாடு' கூட இன்று இல்லை.

ஆனால் கலைஞர் அவர்கள் தொடங்கிய 'முரசொலி' வார ஏடாக இருந்து பிறகு நாளேடாக இன்றும் வருகிறது. அதற்கு ஆசிரியராக 50 ஆண்டுகள் இருந்து அரிய பல கருத்துக்களையும் பகைவரையும் பச்சைத் தமிழால் பந்தாடாமல் பக்குவமாக பதில் எழுதிய பாங்கு, "நறுக்" என்று சொல்ல வேண்டியதையும் "சுருக்" என்ற தைக்க வேண்டியதையும் அப்படியே எழுதாமல் சுண்ணிய குறைவான வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் எழுதும் வித்தை அறிந்த வித்தகர் தான் அண்ணன் முரசொலி செல்வம்.

வாளால் வெல்ல முடியாதவர்களாக நினைத்தவர்களை யும் எழுதுகோலால் வென்றவர் தான் அண்ணன் முரசொலி செல்வம். முரசொலியைப் போல் தந்தை பெரியார் ஆரம்பித்து அறிஞர் அண்ணா ஆசிரியராக இருந்த 'விடுதலை' என்ற நாளிதழ் தான் திராவிட கழகத்தினரால் இன்றும் வருகிறது. முதன் முதலில் ஆரம்பித்த 'குடியரசு' இன்று இல்லை. தலைவர் கலைஞர் அவர்களின் மறைவிற்குப் பிறகும் அவரது மூத்த பிள்ளை முரசொலியை அப்படியே சுவை குறையாமல் சூடு தணியாமல் கொண்டு வந்த எழுத்துச் சிற்பி தான் அண்ணன் முரசொலி செல்வம்,

அவருடைய இல்வாழ்க்கை தந்தை பெரியார் பெண் எப்படி கணவரால் மதிக்கப்பட வேண்டும், சம உரிமை கொடுக்கப்பட வேண்டும் என்பதற்கிணங்க அக்கா செல்வி அவர்களிடம் அவர் காட்டிய அன்பு பாசமும், தந்த உரிமையையும் விவரிக்க முடியாத எழுத்தில் வடிக்க முடியாத ஒன்றாகும். அவர்களது வாழ்க்கை இளையத் தலைமுறையினருக்கு எடுத்துக்காட்டானது ஆகும்.

அண்ணனின் உடல் பெங்களூரிலிருந்து வந்தவுடன் அவருக்கு மாலை அணிவித்து மார்பிலே கைகளைப் பதித்து கண்ணீர் அவர் குடித்த காவிரி போல் வழிந்தோட கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள் அவரது அத்தான் அல்ல! அல்ல! அவர் என்றும் அண்ணன் செல்வம் என்று தான் அழைப்பார். அவர் மீது வைத்திருந்தப் பாசத்தை வெளிப்படுத்திய விதம் பார்ப்போரையெல்லாம் பதறவும் கதறவும் வைத்தது. தலைவர் கலைஞர் அவர்கள் மறைந்தபோது தலைவர் அண்ணன் தளபதி சிந்திய கண்ணீரை கண்ட பிறகு அடுத்து அண்ணன் செல்வம் அவர்களுக்காக அவர் பொத்திப் பொத்தி வைத்திருந்த பாசத்தை நான் பார்த்து துடித்துப் போனேன். தாயின் மடியில் மகன் தலை பதித்து கதறியதைப் போல் அண்ணன் தளபதி கதறினார். எதற்கும் எவருக்கும் வளையமால் வாழ்பவர்தான் நம்முதல்வர். ஸ்பைனல் கார்டு என்பார்களே அப்படி அண்ணன் தளபதி அவர்களுக்கு முதுகெலும்பாக திகழ்ந்தவர் தான் அண்ணன் முரசொலி செல்வம்.

அண்ணனாக, தந்தையாக, அத்தானாக, சாய்ந்திடும் தோளாக அண்ணன் தளபதிக்குள் தான் எத்தனை ஆசை, அன்பு, பாசம், வெளியூரில் இருந்த நான் தொலைக்காட்சியில் பார்த்து உடனே புறப்பட்டு வந்து அண்ணன் செல்வம் அவர்களுக்கு என் வீர வணக்கத்தை செலுத்தினேன்.

கடைசியாக அவர் சிந்திப்பதை நிறுத்துவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு நான் பேசிய போது "அண்ணா! தம்பி உதயநிதி அவர்களை தமிழிசை, சீமான், ராமதாஸ், ஜெயக்குமார் போன்றவர்கள் இவர் என்ன சுதந்திரப் போராட்டத் தியாகியா என்ன தியாகம் செய்தார் இவருக்கு துணை முதல்வர் தருவதற்கு என்று பேசி வருகிறார்கள் அதற்கு நான் தக்கப் பதில் எழுதி முரசொலிக்கு அனுப்ப உள்ளேன்" என்று கூறினேன். (நான் பேசியதை அப்படியே எழுதியுள்ளேன்)

உடனே அண்ணன் செல்வம் அவர்கள் "எழுதுங்கள், மறவாமல் சசிகலா அம்மையார் சிறையிலிருந்து வந்தபின் சீமான் அவர் வீட்டிற்குச் சென்று ஒரு மணி நேரம் அமர்ந்திருந்தாரே அவர் என்ன தியாகி என்பதற்காகவா? என்று எழுதுங்கள். மேலும் ஜெயலலிதா அம்மையார் சிறையில் இருந்து வெளியே வந்த போது பெங்களூரிலிருந்து அவருக்கு பெரிய வரவேற்பு தந்தார்களே அவர் என்ன சுதந்திரப் போராட்டத் தியாகி என்பதற்காகவா என்று கேள்வி எழுப்புங்கள்" என்று என்னிடம் கூறியதை என்னால் எப்படி மறக்க முடியும்?

சகோதரர் உதயநிதி அவர்களை 'சாக்லேட் பாய்' என்று ஜெயக்குமார் கூறியதையும் அவர் ஒரு 'பிளேபாய்' என்று சகோதரர் உதயநிதி உடனே கலைஞரைப் போல் தந்த பதிலையும் மீண்டும் நினைவுபடுத்தி எழுதுங்கள் என்றார். சகோதரர் உதயநிதி அவர்கள் மீதும் அவரது அரசியல் வளர்ச்சியின் மீதும் அண்ணன் செல்வம் கொண்டிருந்த அக்கறையை எப்படி எழுதுவது? அதேபோல் சகோதரர் உதயநிதி அவர்கள் அவரது வருகைக்காக 'மாமா இதை எப்படி தாங்கிக் கொள்வேன்' என்று எழுதிய கடிதம் படித்தவர் நெஞ்சத்தை நெகிழச் செய்தது. பாசத்தை எவராலும் எழுத முடியாது. சிலர் பாசத்தை வெளிப்படுத்துவர் அண்ணன் செல்வம் அவர்களோ பாசத்தை வெளிப்படுத்த தெரியாதவர்.

அதேபோல் ஒரு நாள் அதாவது சுமார் பதினைந்து நாட்களுக்கு முன் அண்ணனுடன் பேசி "கண்டேன் கலைஞரை" என்ற புத்தகம் எழுதியுள்ளேன் அதற்கு "நீங்கள் அணிந்துரை தாருங்கள்" என்றேன். நான் புத்தகத்தை எடுத்துக் கொண்டு பெங்களூர் வருகிறேன் என்றேன். உடனே அண்ணன் செல்வம் அவர்கள் "நான் தற்போது திருவாரூரிலிருந்து பெங்க ளூருக்கு காரில் சென்று கொண்டிருக்கி றேன். நீங்கள் பெங்களூர் வர வேண்டாம். திரு.ராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ் அவர்களி டம் அணிந்துரை வாங்கிக் கொள்ளுங்கள்" என்றார்.

இல்லை அவரிடம் மற்றொரு புத்தகத்திற்கு அணிந்துரை வாங்கி கொள்கிறேன். நீங்கள் அணிந்துரை தர வேண்டும் நான் வருவேன் என்றேன்.

"அப்படியானால் 'நட்பு' என்ற பெயரில் ஒரு புத்தகம் எழுதி வருவதாக சொன்னீர்களே அதற்கு நிச்சயம் அணிந்துரை தருகிறேன் முடித்த பின்பு வாருங்கள்" என்றார். ஆனால் என் ஆசை நிறைவேறாமலே போய்விட்டது. இருந்தாலும் அப்புத்தகத்தில் அவருக்கும் அவருக்கு பிரியமானவராக இருந்த அண்ணன் ராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ் ஆகிய இருவருடைய நட்பையும் நான் கண்டிப்பாக எழுதுவேன்.

சகோதரர் ஆ.ராசா எம்.பி திரு.முரசொலிமாறன் அவர்களால் சிபாரிசு செய்யப்பட்டு ஒன்றிய இணை அமைச்சராக இருந்த போது அவர் பேசிய ஆங்கிலப் பேச்சைக் கேட்டு உடனே தலைவர் கலைஞர் அவர்களிடம் ராசா நன்றாகப் பேசுகிறார் என்று கூறியவர் தான் அண்ணன் முரசொலி செல்வம். அதற்குப் பிறகு நான் ஆ. ராசா கலைஞர் அவர்களுடன் நெருக்கமானார். ஆற்ற லாளர்களை உயர்த்தி மகிழ்வதில் அவருக்கு நிகர் அவரே.

ஒருமுறை " 'எங்கள் தங்கம்' படத்தில் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா அம்மையார் பணம் வாங்காமலே நடித்துக் கொடுத்தார்கள் என்கிறார்களே அது உண்மையா?" என்று கேட்டேன். அதற்கு "இல்லை இல்லை வசூலான பணத்தில் அவர்களுக்கு பணம் கொடுக்கப்பட்டது" என்று கூறினார்கள்.

அதேபோல் கலைஞர் அவர்களும் எம்.ஜி.ஆர் அவர்களுக்கும் நல்ல நட்புடன் இருந்தார்கள் என்றும் நாமக்கல் கவிஞர் எழுதிய 'மலைக்கள்ளன்' படத்திற்கு கதை வசனம் எழுத கலைஞரிடம் எம்.ஜி.ஆர் கேட்க கலைஞரோ நாமக்கல் கவிஞர் காங்கிரஸ்காரர் அவர் கதைக்கு நான் திரைக்கதை எழுதினால் அது எனது கொள்கைக்கு முரணாக இருக்கும் என்று கூறிவிட்டு திருவாரூர் சென்று விடுகிறாராம்.

உடனே எம்.ஜி.ஆரும், எம்.ஜி.சக்கரபாணியும் திருவாரூக்கே சென்று "நீங்கள் எழுதிய ராஜகுமாரி, மருதநாட்டு இளவரசி, மந்திரகுமாரி போன்ற படங்களில் சுதாநாயகனாக நடித்துத்தான் நான் திரையுலகில் பிரபலமானேன். எனவே மலைக்கள்ளன் படத்திற்கு தயவுகூர்ந்து எனக்காக திரைக்கதை எழுதி தாருங்கள், என்று எம்.ஜி.ஆர் கேட்ட பிறகு மனம் இரங்கி நட்புக்காக மலைக்கள்ளன் படத்துக்கு கலைஞர் திரைக்கதை வசனம் எழுதினாராம். அந்த படம் தான் எம்.ஜி.ஆருக்கு மிகப்பெரியப் புகழைத் தந்தது" என்று அண்ணன் செல்வம் என்னிடம் கூறினார்.

பிறகு "எம்.ஜி.ஆரை உடனே ஏன் நீக்க வேண்டும் என நான் கேட்க 'கலைஞர் எங்கே நீக்கினார். இன்னொரு வாய்ப்பு கொடுத்துப் பார்ப்போம் என்று தான் கூறினார். நாவலர் மற்றும் என்.வி.என் தான் வெளியே ஓடிப்போய் எம்.ஜி.ஆர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்' என்று கூறினார்கள். கலைஞர் ஏன் இப்படி செய்தீர்கள் என்று நாவலரைக் கேட்க 'ஆமாம்! நீங்கள் இப்படியே பேசிக் கொண்டே, இருப்பீர்கள் அதற்காகத் தான் அப்படி கூறினேன் என்று நாவலர் சொன்னாராம். பிறகு அந்த நாவலர்தான் எம்.ஜி.ஆரிடம் சரணடைந்தார்."

இப்படி எத்தனை எத்தனையோ சம்பவங்கள். எளிமையாக இதுவரை வாழ்ந்திட்ட பெருந்தகையாளர் தான் அண்ணன் செல்வம் என்று கண்ணீரோடு வரைகின்றேன். ஆனால் புகழாய் என்றென்றும் இத்தமிழ் உலகில் வாழ்ந்து கொண்டுதான் இருப்பார். வாழ்க அண்ணன் முரசொலி செல்வம்! வாழ்க அவர் புகழ்!